தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-1-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 70வது குடியரசு தினவிழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 70வது குடியரசு தினவிழா இன்று (26-1-2019) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முனைவர் நீ. குமார், துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி குடியரசு தின விழா உரையாற்றினார். வேளாண்மைக்கல்லூரி முதன்மையர் முனைவர் எம். கல்யாணசுந்தரம் அவர்கள் துணைவேந்தரை வரவேற்றார்.

துணைவேந்தர் அவர்கள் தமது உரையில் நாட்டை ஒன்றிணைத்து இந்தியாவை உலகின் மிகப்பெரிய குடியரசாக்கிய இந்தியத் தலைவர்களின் தியாகங்களை நினைவு கூர்ந்தார். இந்தியாவில் நவீன வேளாண்மை தொழில்நுட்பங்களால் நாம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று அனைவருக்கும் உணவு அளிக்கும் நிலையடைந்தோம். உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பையும் தற்போதுள்ள தேசத்தின் எதிர்பார்ப்பையும் சுட்டிக்காட்டினார்.

அவர் தமது உரையில், நூறு ஆண்டுகளுக்கு மேலான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்தியாவில் முதன்மையான பல்கலைக்கழகமாகவும் உலக அளவில் பட்டியலிடப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றாகவும் இருப்பது நமக்கு பெருமை சேர்ப்பதாகும் எனக் குறிப்பிட்டார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்ட பல்வேறு விருதுகள், பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்களின் கடுமையான உழைப்பின் வெகுமதி என நினைவு கூர்ந்தார்.

தனக்கென எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாத உழைப்பாளி விவசாயி என்ற மகாத்மா காந்தியின் வாசககங்ளை நினைவு கூர்ந்தார். மக்களின் வாழ்வாதாரம் மற்றும் உணவுப்பாதுகாப்புக்காக நாம் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டுமென்று அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்தார். துணைவேந்தரது, குடியரசு தின உரை அனைவரின் கவனத்தையும் ஈர்த்து தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்துவதாக அமைந்தது.

சிறந்த தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சிறுவர் சிறுமியர் மற்றும் மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், தேசிய மாணவர் படை மாணவர்களோடு தேசிய மாணவர் படை அதிகாரிகள் கேப்டன் மனோன்மணி மற்றும் டாக்டர் பாடில் சந்தோஷ் கணபதி, நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், அலுவலர்கள், பல்கலைக்கழகத்திற்குள் செயல்படும் ஆரம்பப் பள்ளி சிறார்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்